செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 363 நாள்: 21/2/17

## பத்திரிகை செய்தி

01/04/2017-ம் தேதி முதல் வேலூர் மாவட்டத்தில் ஸ்மார்ட் குடும்ப அட்டை விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இவ்வாறு, ஏற்கனவே, வழங்கப்பட்ட மின்னணு குடும்ப அட்டை தொலைந்து போனாலோ, சேதமடைந்து பயன்படுத்த இயலாத நிலையிலிருந்தாலோ, தமிழ்நாடு கேபிள் டி.வி. நிறுவனத்தின் இ-சேவை மையங்களில் ரூ.30/- கட்டணம் செலுத்தி புதிதாக மாற்று மின்னணு ஸ்மார்ட் குடும்ப அட்டையை பெற்றுக்கொள்ளலாம். இதற்கு பழைய குடும்ப அட்டையில் பதிவு செய்துள்ள கைப்பேசி எண்ணினை தெரிவிக்க வேண்டும். அந்த எண்ணுக்கு ஒருமுறை மட்டும் பயன்படுத்தக்கூடிய கடவுச் சொல் (OTP) எண் அனுப்பப்படும். அந்தக் கடவுச் சொல்லை, பயன்படுத்தி புதிய மின்னணு குடும்ப அட்டை வழங்கப்படும். பழைய குடும்ப அட்டையில் பதிவு செய்த கைப்பேசி எண் தெரியாதவர்களுக்கு இ-சேவை மையங்களில், புதிய மின்னணு குடும்ப அட்டை வழங்க இயலாது.

புதிய மின்னணு குடும்ப அட்டையில் உள்ள விவரங்களை திருத்தம் செய்யும் பணி மேற்கூறிய இ-சேவை மையங்களில் மேற்கொள்ளப்படுகிறது. பொதுமக்கள், மின்னணு குடும்ப அட்டைகளில், குடும்ப உறுப்பினர்களின் பெயர்களை நீக்குதல், சேர்த்தல், முகவரி திருத்தம், குடும்ப தலைவர் பெயர் மாற்றம் மற்றும் குடும்ப அட்டையை ஒப்புவித்தல் ஆகிய சேவைக்காக இ-சேவை மையங்களில் ரூ.60/- கட்டணமாக செலுத்தி மேற்படி கோரிக்கைகளை பதிவு செய்துகொள்ளலாம். இவ்வாறு பதிவு செய்யப்பட்ட கோரிக்கைகளை அந்தந்த வட்ட வழங்கல் அலுவலர்கள் ஒப்புதல் செய்தவுடன், விண்ணப்பதாரர் பதிவு செய்த கைப்பேசி எண்ணுக்கு குறுஞ்செய்தி அனுப்பப்படும். அவ்வாறு மனுதாரர் குறுஞ்செய்தி பெறப்பட்டவுடன், அருகில் உள்ள தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. நிறுவனத்தால் நிர்வாகிக்கப்படும் இ-சேவை மையத்தை அணுகி திருத்தப்பட்ட ஸ்மார்ட் குடும்ப அட்டையை, ரூ.30/-இ கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம் என வேலூர் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

ந.க.எண்.கு3/8278/2016

ஒ/ம.

செ.ம.தொ.அ
வேலூர்- 9.